

# 5 இல்ல விளையாட்டுப் போட்டி

நான் பாலன்.

இன்று எங்கள் கல்லூரி விளையாட்டுப்போட்டி. காலையில் எழுந்து ஆயத்தம் **ஆகின்றேன்**. பாடசாலைக்கு **விரைகின்றேன்**. பின் மைதானத்திற்குச் **செல்கின்றேன்**. பாடசாலை மைதானம் எங்கும் தோரணங்கள். இல்ல அலங்கரிப்புகள். போட்டி **ஆரம்பமாவதற்கு** ஏற்பாடுகள் **நடைபெறுகின்றன.**



**இதோ கவனிக்கவும். ''இன்னும் சொற்ப வேளையில் 17 வயதின் கீழ்ப்பட்ட ஆண்களுக்கான 100மீற்றர் ஓட்டப்போட்டி ஆரம்பமாக உள்ளது.''**

100 மீற்றர் ஓட்டப் போட்டியில் எமது இல்லத்தில் நானும் தர்ஷனும் ஓட **இருக்கின்றோம்.**



**தாமரை, மல்லிகை, முல்லை இல்லங்களைச் சேர்ந்த 105,108,420,425,650,675 ஆகிய இலக்கங்களைக் கொண்ட போட்டியாளர்கள் உடனடியாக மைதானத்திற்கு வருகை தருமாறு கேட்டுக் கொள்கின்றோம்.**

தர்ஷன் இன்னும் வரவில்லை, **தேடுகின்றேன்**.



**தாமரை இல்லத்தைச் சேர்ந்த 105, 108 ஆகிய இலக்கங்களைக் கொண்ட போட்டியாளர்கள் உடனடியாக மைதானத்திற்கு வருகை தருமாறு கேட்டுக் கொள்கின்றோம்.**

என்னையும் தர்ஷனையும் மைதானத்திற்கு **அழைக்கின்றார்கள்.** அதோ தர்ஷன் **வருகிறான்.** நானும் தர்ஷனும் **ஓடுகின்றோம்.** நான் முதலிடம் **பெறுகின்றேன்.**



எனக்கு மிகுந்த சந்தோசம்.





**100 மீற்றர் ஓட்டப் போட்டியைத் தொடர்ந்து 15 வயதின் கீழ்ப்பட்ட ஆண், பெண் இருபாலருக்குமான நீளம் பாய்தல் போட்டி இடம் பெறும். போட்டியாளர்கள் தயாராக இருக்கும்படி கேட்டுக் கொள்கின்றோம்.**

## சொல் அறிமுகம்

| | | |
|---|---|---|
| சொற்ப வேளையில் | - | ස්වල්ප වේලාවකින් |
| 17 வயதின் கீழ் | - | 17 න් පහළ |
| தாமரை | - | නෙළුම් |
| முல்லை | - | ගැටපිච්ච මල් |
| மல்லிகை | - | පිච්ච |
| போட்டியாளர்கள் | - | තරඟකරුවෝ |
| இருபாலர் | - | ස්ත්‍රී පුරුෂ දෙපාර්ශවය |

### செயற்பாடு - 01

உரையாடல்களை நண்பர்களுடன் இணைந்து வாசியுங்கள்.

### செயற்பாடு - 02

1. இப்பாடத்தில் வரும் இல்லங்களின் பெயர்களைத் தருக.
2. தாமரை இல்லத்திலிருந்து 100 மீற்றர் ஓட்டப் போட்டியில் கலந்து கொண்ட போட்டியாளர்கள் யாவர்?
3. 100 மீற்றர் போட்டியில் கலந்துகொள்ளும், போட்டி யாளர்களின் இலக்கங்களைத் தருக.
4. 100 மீற்றர் ஓட்டப் போட்டியைத் தொடர்ந்து இடம்பெற உள்ள போட்டி எது?

**பின்வரும் அட்டவணையை அவதானியுங்கள், வாசியுங்கள்.**

| | | | | | | |
|---|---|---|---|---|---|---|
| 100 | நூறு | → | 100 | + | நூற்று |
| 200 | இருநூறு | → | 200 | + | இருநூற்று |
| 300 | முந்நூறு | → | 300 | + | முந்நூற்று |
| 400 | நாநூறு | → | 400 | + | நானூற்று |
| 500 | ஐந்நூறு | → | 500 | + | ஐந்நூற்று |
| 600 | அறுநூறு | → | 600 | + | அறுநூற்று |
| 700 | எழுநூறு | → | 700 | + | எழுநூற்று |
| 800 | எண்ணூறு | → | 800 | + | எண்ணூற்று |
| 900 | தொளாயிரம் | → | 900 | + | தொளாயிரத்து |

| | | |
|---|---|---|
| *121* | - | நூற்று இருபத்தொன்று |
| *132* | - | நூற்று முப்பத்திரண்டு |
| *143* | - | நூற்று நாற்பத்து மூன்று |
| *154* | - | நூற்று ஐம்பத்துனான்கு |
| *165* | - | நூற்று அறுபத்தைந்து |
| *176* | - | நூற்று எழுபத்தாறு |
| *187* | - | நூற்று எண்பத்தேழு |
| *198* | - | நூற்றுத் தொண்ணூற்றெட்டு |
| *247* | - | இருநூற்று நாற்பத்தேழு |
| *250* | - | இருநூற்று ஐம்பது |

## செயற்பாடு - 03

**பின்வரும் இலக்கங்களை எழுத்தில் எழுதுங்கள்.**

| | | | |
|---|---|---|---|
| 1. 245 | ______________ | 6. 138 | ______________ |
| 2. 360 | ______________ | 7. 443 | ______________ |
| 3. 672 | ______________ | 8. 635 | ______________ |
| 4. 465 | ______________ | 9. 489 | ______________ |
| 5. 120 | ______________ | 10. 490 | ______________ |

**பின்வரும் வாக்கியங்களை அவதானியுங்கள்.**

| தொகுதி 1 | தொகுதி 2 |
|---|---|
| நான் ஓடுகின்றேன்.<br>நாங்கள் ஓடுகின்றோம். | நீ ஓடுகின்றாய்.<br>நீங்கள் ஓடுகின்றீர்கள். |
| நான் போகின்றேன்.<br>நாங்கள் போகின்றோம். | நீ போகின்றாய்.<br>நீங்கள் போகின்றீர்கள். |
| நான் எடுக்கின்றேன்.<br>நாங்கள் எடுக்கின்றோம். | நீ எடுக்கின்றாய்.<br>நீங்கள் எடுக்கின்றீர்கள். |

## செயற்பாடு - 05

# நிகழ்காலம்

**முதல் நிரலை அவதானியுங்கள். அதைப் பின்பற்றி மற்றைய நிரல்களை முழுமைப்படுத்துங்கள்.**

| | ஓடு | விளையாடு | அனுப்பு | பூட்டு | தள்ளு |
|---|---|---|---|---|---|
| நான் | ஓடுகின்றேன் | ________ | ________ | ________ | ________ |
| நாங்கள் | ஓடுகின்றோம் | ________ | ________ | ________ | ________ |
| நீ | ஓடுகின்றாய் | ________ | ________ | ________ | ________ |
| நீங்கள் | ஓடுகின்றீர்கள் | ________ | ________ | ________ | ________ |
| அவர் | ஓடுகின்றார் | ________ | ________ | ________ | ________ |
| அவன் | ஓடுகின்றான் | ________ | ________ | ________ | ________ |
| அவள் | ஓடுகின்றாள் | ________ | ________ | ________ | ________ |
| அவர்கள் | ஓடுகின்றார்கள் | ________ | ________ | ________ | ________ |
| அது | ஓடுகின்றது | ________ | ________ | ________ | ________ |
| அவை | ஓடுகின்றன | | | | |

## செயற்பாடு - 06

# நிகழ்காலம்

**முதல் நிரலை அவதானியுங்கள். அதைப் பின்பற்றி மற்றைய நிரல்களை முழுமைப்படுத்துங்கள்.**

| | நடி | நினை | மடி | சந்தி | பார் |
|---|---|---|---|---|---|
| நான் | நடிக்கின்றேன் | ______ | ______ | ______ | ______ |
| நாங்கள் | நடிக்கின்றோம் | ______ | ______ | ______ | ______ |
| நீ | நடிக்கிறாய் | ______ | ______ | ______ | ______ |
| நீங்கள் | நடிக்கிறீர்கள் | ______ | ______ | ______ | ______ |
| அவர் | நடிக்கின்றார் | ______ | ______ | ______ | ______ |
| அவன் | நடிக்கின்றான் | ______ | ______ | ______ | ______ |
| அவள் | நடிக்கின்றாள் | ______ | ______ | ______ | ______ |
| அவர்கள் | நடிக்கின்றார்கள் | ______ | ______ | ______ | ______ |
| அது | நடிக்கின்றது | | | | |
| அவை | நடிக்கின்றன | ______ | ______ | ______ | ______ |

**பின்வரும் இடைவெளியை நிரப்புங்கள்.**

1. நீ (நினை) ______________________
2. அது (பற) ______________________
3. நீங்கள் (பூட்டு) ______________________
4. அவள் (நடு) ______________________
5. நான் (பார்) ______________________

## செயற்பாடு - 07

01. நான் (ஓடு) ____________________

நாங்கள் (ஓடு) ____________________

நீ (ஓடு) ____________________

நீங்கள் (ஓடு) ____________________

02. நான் (படி) ____________________

நாங்கள்(படி) ____________________

நீ (படி) ____________________

நீங்கள் (படி) ____________________

03. நான் (வாசி) ____________________

நாங்கள் (வாசி) ____________________

நீ (வாசி) ____________________

நீங்கள் (வாசி) ____________________

04. நான் (பாய்) ____________________

நாங்கள் (பாய்) ____________________

நீ (பாய்) ____________________

நீங்கள் (பாய்) ____________________

05. ____________________ குடிக்கின்றேன்.

____________________ குடிக்கின்றோம்.

____________________ குடிக்கின்றீர்.

____________________ குடிக்கின்றீர்கள்.

பின்வரும் அழைப்பிதழை அவதானிப்போம், வாசிப்போம்.



## செயற்பாடு - 08

**பின்வரும் தகவல்களை அடிப்படையாகக் கொண்டு அழைப்பிதழ் ஒன்றினைத் தயாரியுங்கள்.**

*கலைவிழா*

*2015. 03. 10*

*பாரதி கலையரங்கம்*

*கவிஞர் - தமிழ் அன்பன் (பிரதம அதிதி)*

# விளம்பரம்

**இதோ வெளிவந்துவிட்டது!**
**சின்னஞ் சிறிய சிறுவர்கள்**
**சிந்தை மகிழ்ந்து படித்திடும்**
**மாதாந்தச் சஞ்சிகை**



## செயற்பாடு - 09

புதிதாக அறிமுகப்படுத்தப்படவுள்ள பற்பசை ஒன்றிற்கான விளம்பரம் ஒன்றினைத் தயாரியுங்கள்.

## செயற்பாடு - 10

**பின்வரும் நிகழ்ச்சி நிரலை அடிப்படையாகக் கொண்டு வகுப்பறையில் அறிவித்தலைச் செய்து காட்டுங்கள்.**



**19 வயதின் கீழ் ஆண்களுக்கான 800 மீற்றர் ஓட்டப் போட்டி ஆரம்பமாகவுள்ளது. 245, 246, 360, 365, 670, 672 இலக்கங்களைக் கொண்ட போட்டியாளர்கள் மைதானத்திற்கு வருகை தருமாறு கேட்டுக் கொள்கின்றோம்.**

| நிகழ்ச்சி | வயது | போட்டியாளர்களின் இலக்கங்கள் |
|---|---|---|
| *800 மீற்றர் ஆண்கள்* | *19 வயதின் கீழ்* | *245, 246, 360, 365, 670, 672* |
| *உயரம் பாய்தல் பெண்கள்* | *17 வயதின் கீழ்* | *154, 156, 463, 465, 663,664* |
| *குண்டெறிதல் ஆண்கள்* | *15 வயதின் கீழ்* | *120, 121, 489, 490, 621, 622* |
| *அஞ்சலோட்டம்* | *13 வயதின் கீழ்* | *146, 147, 464, 465, 634, 635* |
| *ஈட்டி எறிதல்* | *19 வயதின் கீழ்* | *138, 139,443, 44, 636, 637* |

## செயற்பாடு - 11

**பின்வரும் அறிவித்தலை அவதானியுங்கள், வாசியுங்கள்.**




இன்னும் சற்று நேரத்தில் யாழ்தேவி கடுகதிப் புகையிரதம் மூன்றாம் மேடைக்கு வர உள்ளது.

இது மு.ப 5.30 மணிக்கு யாழ்ப்பாணம் நோக்கிப் புறப்படும். யாழ்ப்பாணம் நோக்கிப் புறப்படும் யாழ்தேவி கடுகதி புகையிரதம்.

பொல்காவெல

குருநாகல்

மாகோ

அனுராதபுரம்

வவுனியா

கிளிநொச்சி ஆகிய நிலையங்களில் நிறுத்தப்படும்.

நன்றி

வணக்கம்.

## செயற்பாடு - 12

**இடைவெளிகளை நிரப்புங்கள்.**

பயணிகளின் கவனத்திற்கு!

இன்னும் சற்று நேரத்தில் உடரட்ட மெனிக்கே புகையிரதம் ________ மேடைக்கு வர உள்ளது.

இது பி.ப ________ பதுளை நோக்கிப் புறப்படும். பதுளை நோக்கிப் புறப்படும் ________ புகையிரதம் அனைத்துப் புகையிரத ________ தரித்து செல்லும்.

________

________